# பூந்தமல்லி வரை மெட்ரோ ரெயில் சேவை

சட்டசபையில் நேற்று தொழில்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்துக்கு பின் அமைச்சர் எம்.சி.சம்பத் பதிலளித்துப் பேசினார். பின்னர் அந்தத் துறைகளுக்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:-

கடலூர் சிப்காட் தொழில் பூங்காவில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் ஆலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

சிறுசேரி, இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், வல்லம்-வடகால், தூத்துக்குடி, ஓசூர் சிப்காட் தொழில் பூங்காக்களை இயற்கை எழில்மிகு பூங்காக்களாக மேம்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். சிப்காட் தொழில்பூங்காக்களில் 2.32 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

சென்னை தரமணி டைடல் பார்க்கில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கான தொழில் முனைவோர் துவக்க மையம் இன்று அமைக்கப்படும்.

செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 550 கிலோவாட் திறன் கொண்ட மின் மோட்டார் கொள்முதல் செய்யப்படும். தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு உற்பத்தியையும் விற்பனையையும் மேம்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் அறிவிப்புகளை வெளியிட்டார்.

மேலும் அமைச்சர் எம்.சி.சம்பத், ''பூந்தமல்லி வரை மெட்ரோ ரெயில் சேவை நீட்டிக்கப்பட வேண்டும் என்று தி.மு.க. எம்.எல்.ஏ. கிருஷ்ணசாமி கோரிக்கை விடுத்திருந்தார். சென்னை கலங்கரை விளக்கத்தில் இருந்து பூந்தமல்லி வரை 29 கி.மீ. நீளத்தில் மெட்ரோ ரெயில் சேவை இரண்டாம் கட்டப் பணியில் நிறைவேற்றப்படும்'' என்று அறிவித்தார்.